www.tkedu.lk

புலமை வித்தகன் வெளியீடு



புலமை வித்தகன்

5

தரம் 5

தொடர் - 4 இலவசக்கருத்தரங்கு

ஆசிரியர் இ.பிரசாந்தன் தரம் 5

சரியான விடையின் கீழ்க்கோடிடுக

1. 2,3,5,7 ஆகிய இலக்கங்களில் மூன்று இலக்கங்களை மாத்திரம் பயன்படுத்தி ஆக்கப்பட்ட பின்வரும் எண்களில் எந்த எண் அதில் உள்ள இலக்கங்கள் ஒவ்வொன்றினாலும் மீதமின்றி வகுபடக்கூடியது
   1. 372 2. 375 3. 735


2. நான் ஒரு பெண் ஆவேன். மீனாவின் மகள் எனது மகளின் தாயாவாள். எனின், மீனாவுக்கும் எனக்கும் உள்ள உறவுமுறை யாது?
   1. மீனாவுக்கு நான் பாட்டி ஆவேன்.
   2. மீனாவுக்கு நான் மகள் ஆவேன்.
   3. மீனா எனக்கு தாய் ஆவாள்.

3. ஒரு குழுவிலுள்ள 6 பேர்களிடையே ஒவ்வொரு ஆண்களுடைய கையிலும் 2 பேனைகளும் , ஒவ்வொரு பெண்களுடைய கையிலும் 3 பேனைகளும் வைத்திருந்தனர். அவர்களிடம் காணபட்ட பேனைகளின் மொத்த எண்ணிக்கை 16 எனின் அக்குழுவில் இருந்த ஆண்களின் எண்ணிக்கை யாது?
   1. 3 2. 4 3. 2

4. ஒரு பாடசாலையில் ஆரம்பப்பிரிவிற்கான மணி 20 நிமிடத்திற்கு ஒரு தடவையும் இடைநிலைப் பிரிவிற்கான மணி 30 நிமிடத்திற்கு ஒரு தடவையும் ஒலிக்கும். இரு மணிகளும் மு.ப 8.00 மணிக்கு ஒன்றாக ஒலித்தது. எனின் மீண்டும் இரு மணிகளும் ஒன்றாக ஒலிக்கும் நேரம் யாது?
   1. மு.ப 8.50 2. மு.ப 9.00 3. மு.ப 9.30

5. குமார் செவ்வாய்க்கிழமையை விட ரூபா 20.00 அதிகமாகப் புதன் கிழமையும், புதன்கிழமையைப் போல் மூன்று மடங்கு வியாழக்கிழமையும் செலவிட்டான்.அவன் வியாழக்கிழமை செலவிட்ட தொகை ரூபா 150.00 எனின் அவன் செவ்வாய்க்கிழமை செலவிட்ட தொகை
   1. ரூபா 10.00 2. ரூபா 40.00 3. ரூபா 30.00

6. பின்வரும் உருக்கோலத்தில் அருகருகே ஒரே நிறம் அமையாதவாறு நிறம் தீட்டப்பட வேண்டும் அவ்வாறு நிறம் தீட்டுவதற்கு தேவையான நிறங்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை யாது?
   1. 6 2. 5 3.



.7. A,B,C,D,E ஆகிய ஐவரில் A இலும் வயது குறைவானோர் மூன்றுபேர் மட்டுமே உள்ளனர். C இலும் வயது குறைவானோர் இரண்டுபேர் மட்டுமே உள்ளனர். E மாத்திரமே B இலும் இளையவர் எனில் வயதில் கூடியவர் யார்?
   1. A 2. C 3. D

www.lkedu.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

www.lkedu.lk

8. 4 பேர் ஒரு வேலையை 6 நாட்களில் செய்து முடிப்பர். அவர்கள் 2 நாட்கள் வேலை செய்தனர். அதன் பின் மேலும் 4 பேர் வேலையில் சேர்ந்தனர் எனின் , மீதமுள்ள வேலையை முடிக்க எத்தனை நாட்கள் எடுக்கும்?
   1. 2 2. 3 3. 4

9. 9. ஒரு பக்க நீளம் 8cm ஆகவுள்ள சமபக்க முக்கோணி ஒன்றினை விரித்து சதுரம் ஆக்கப்பட்டது எனின் சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?
   1. 6cm 2. 32cm 3. 24cm

10. வியாபாரி ஒருவர் 3 பென்சில்களை 50 ரூபா வீதம் வாங்கி 2 பென்சில்களை 50 ரூபா வீதம் விற்பனை செய்தார். அவர் ஒரு நாள் பென்சில்களை விற்பனை செய்ததால் கிடைத்த இலாபம் 500 ரூபா எனின் அவர் எத்தனை பென்சில்களை விற்பனை செய்தார்?
   1. 20 பென்சில்கள் 2. 30 பென்சில்கள் 3. 60 பென்சில்கள்

11. கவிதா பவியை விட மூன்று வயது கூடியவள். கலா பவியை விட இரண்டு வயது குறைந்தவள். திவ்யா பவியை விட ஒரு வயது கூடியவள். இவர்களுள் வயது கூடியவர்?
   1. கவிதா 2. திவ்யா 3. புவி

12. கீதா தனது பிறந்தநாளுக்காக சில கேக் பெட்டிகளை வாங்கினாள். ஒரு பெட்டியில் உள்ள கேக்கை 12 சம துண்டுகளாக வெட்டினால் எல்லாக் கேக்குகளிலும் இருந்து 180 துண்டுகள் கிடைக்கும். கேக் ஒன்றை 8 சம துண்டுகளாக வெட்டினால் கிடைக்கும் கேக் துண்டுகளின் எண்ணிக்கை யாது ?
   1. 120 2. 140 3. 160

13. 10m நீளமான நாடாவை 2m நீளமுடைய துண்டுகளாக வெட்டுவதற்கு 20 செக்கன்கள் தேவை. எனின் 30m நீளமான நாடாவை 2m நீளமுடைய துண்டுகளாகவெட்டுவதற்குத் தேவைப்படும் நேரம் யாது?
   1. 70 செக்கன்கள 2. 50 செக்கன்கள 3. 60 செக்கன்கள

△ × △ + △ = 12
□ × △ × △ = 18
○ × □ - △ = 33

14. தரவுகளின்படி ○ இற்குரிய பெறுமானம் யாது?
   1. 4 2. 3 3. 2

15. ஒரு பக்கத்தில் 10 தூண்கள் கொண்ட சதுர வடிவ மண்டபம் ஒன்றில் ஓர் இடைவெளியில் இரண்டு சிவப்பு நிற பூக்களுக்கு நடுவில் ஒரு மஞ்சள் நிறப்பூ கட்டப்பட்டது எனின், அம்மண்டபத்திலுள்ள சிவப்பு, மஞ்சள் நிற பூக்கள் முறையே,
   1. 80, 40 2. 72, 36 3. 60, 30

16. 100cm நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 15cm நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5cm வீதம் ஒன்றின் மீது ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?
   1. 75 cm 2. 80 cm 3. 80 cm

www.lkedu.lk

- **நிசார் வட்டமொன்றின் அரைவாசித் தூரத்தினை ஓடி முடிக்கும் போது லவன் அதன் நான்கின் மூன்று பங்கு தூரத்தில் நின்றான்.**
- **சுமன் அவ்வட்டத்தின் அரைவாசித் தூரத்தில் ஓடும் போது நிசார் முழுத் தூரத்தினை ஓடி முடித்தான்**

17. மூவரிலும் குறைவான வேகத்தில் ஓடுபவர் யார்?
    1. நிசார் 2. லவன் 3. சுமன்

18. ஓட்ட வேகம் குறையும் ஒழுங்கில் அவர்களின் பெயர்கள் உள்ள விடையினைத் தெரிவு செய்க.
    1. நிசார் லவன் சுமன்
    2. நிசார் சுமன் லவன்
    3. சுமன் லவன் நிசார்

19 ஒரு மாலை வேளையில் ராணியும் வாணியும் ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணம் நின்றனர். அவர்களில் வாணியின் நிழல் அவளிற்கு முன்பக்கம் விழுந்தது. எனின் ராணி எத்திசை நோக்கிப் பார்த்தவண்ணம் நிற்கிறாள்?
    1. மேற்கு 2. வடக்கு 3. கிழக்கு

.

20. ஒவ்வொரு மணித்தியாலமும் 5 நிமிடங்கள் பிந்திக் காட்டும் கடிகாரம் ஒன்று மு.ப 8.30 இற்குச் சரியான நேரத்திற்கு சீர் செய்யப்பட்டு வைத்தால் பி.ப 12.30 இற்கு அக்கடிகாரம் காட்டும் நேரம் யாது?
    1. பி.ப 12.50 2. மு.ப 12.10 3. பி.ப 12.10